உ

சிவமயம்.

புதுவயல்

# ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்

## பதினேழாவதாண்டு

# அறிக்கை.



வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடுமுற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
தேடுகல்வி யிலாததொ ரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.

பிரமாதி ஆண்டு சித்திரைத்திங்கள் 11-ம் நாள்.

1939.

நாவிற்கினிய நல்லுணவூட்டும்

## ராம்ஸ் அண் கோ

### ★ புதிய கட்டிடத்திற்கு தாங்கள் ★

விஜயம் செய்தீர்களா?

புதிய குளிர்ச்சி பொருந்திய பழச் சத்துக்களால் தயாரிக்கப்பெற்ற பானங்களும், சுகாதார முறைப்படி எலக்ட்ரிக்மிஷினில் தயாராகும் ஜூஸ்புருட், ஐஸ்கிரீம், புருட்சாலெட், மிலக் கேக், முதலிய இனிய தின்பண்டங்களை அருந்தி கோடைகால வெப்பத்தையும் அயர்ச்சியையும் போக்கி சந்தோஷமாயிருங்கள்

பிராஞ்சு:-
செக்காலை ரோடு,
காரைக்குடி.

★ ★ ★

ராம்ஸ் & கோ,
ஸ்வீட் ஐஸ் பாக்டரி
காரைக்குடி.

---

பழுதற்ற அமைப்பிற்கு
S. V. R.
உத்தரவாதமளிக்கிறது

## "S.V.R. பாபுலர்"

சைகிளின் ஒவ்வொரு பாகமும் சாஸ்டே பாக்டரியில் உறுதிக்கும் நீண்ட நாள் உழைப்பிற்கும் நன்ருய் சோதிக்கப்பட்டு தயாரிக்கப் பெற்றவை. எங்கும் — முக்கிய வியாபாரிகளிடம் — கிடைக்கும்.

## ஒரு S.V.R. பாபுலர்
வாங்குங்கள்.

## எஸ். வி. ஆர். சைகிள் மார்ட்,

பிராஞ்சு:- தூத்துக்குடி. : : காரைக்குடி.



புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக் கட்டிடம்
(24—4—1939.)



புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் 16-வது ஆண்டுவிழா தினத்தன்று "தீனபந்து அல்லது தேசத்தொண்டு"
எனும் நாடகத்தில் நடித்த, ச.வி. மாணவ மாணவிகளும், அதன் ஆசிரியர், திரு SP. வீரப்பா அவர்களும்.

ஓம்

வந்தேமாதரம்.

புதுவயல்

# ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்
## பதினேழாவதாண்டு
# அறிக்கை.

அன்பிற் சிறந்த அவைத்தலைவரவர்களே!

செந்தமிழ்ச் செல்வர்களே!!

செல்விகளே!!!

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் நமது சங்கம் துந்துபி ஆண்டு ஆடித்திங்கள் 9-ம் நாள் (24-7-1922)ல் நிறுவப்பெற்று இதன் முக்கிய கொள்கைகளான இளைஞர் முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, கதர் அபிவிர்த்தி, ஜீவகாருண்யம் ஆகியவற்றின் வளர்ச்சிகருதி பதினேழு ஆண்டுகளாகத் தொண்டாற்றி வந்துள்ள நமது சங்கத்திற்கு இன்று பதினெட்டாம் ஆண்டு ஆரம்பமாகின்றது.

| | | |
|---|---|---|
| தலைவர், | திருவாளர், | வீர. சோலையப்பன். |
| காரியதரிசி | ,, | மெ. சிதம்பரம். |
| உபகாரியதரிசி | ,, | சே. பழநியப்பன், |

## அங்கத்தினர்கள்.

1 திருவாளர் சா. சிதம்பரம் செட்டியார், (தத்கலீன்)
2 ,, பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார்
3 ,, சித. இராமசாமி செட்டியார், (சிரம்பான்)
4 ,, வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார்
5 ,, வீர. பழநியப்பசெட்டியார் (டேரியா)
6 ,, ராம. சுப. அடைக்கப்ப செட்டியார் (பினங்கு)
7 ,, வீர. சோலையப்ப செட்டியார்
8 ,, வீர. பழ. விருத்தகிரி செட்டியார் (பினங்கு)
9 ,, பழ. ப. ப. வீர. வீரப்பசெட்டியார்
10 ,, மெ. கரு. அண்ணாமலை செட்டியார் (பினங்கு)
11 ,, அ. நாகப்பசெட்டியார் (தையக்கோன்)
12 ,, அ. சு. பழ. சு. சோம. இராமநாதன் செட்டியார் (மீன்லா)
13 ,, சா. காசிச்செட்டியார்
14 ,, மு. மு. அழ. அழகப்ப செட்டியார்
15 ,, பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார்
16 ,, பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார்
17 ,, அரு. ப. மு. வீர. அண்ணாமலை செட்டியார்
18 ,, எ. ராம. வீர. பழ. முத்துவள்ளியப்பசெட்டியார்
19 ,, வீர. இராமநாதன் செட்டியார்
20 ,, கா. குழ. ராம. வீர. இராமசாமிசெட்டியார்
21 ,, லெ. இராமநாதன் செட்டியார் (பியூ)
22 ,, பெ. க. வீர. நாராயணன் செட்டியார்
23 ,, வீர. அழ. அழகப்ப செட்டியார் (மோல்மேஞ்குன்)
24 ,, V. இராமசாமி செட்டியார்

| | | |
|---|---|---|
| 25 | ,, | அ. அழ. அண்ணாமலை செட்டியார் |
| 26 | ,, | சே. பழநியப்பசெட்டியார் |
| 27 | ,, | ப. வடு. பெரி. ராம. கா. அருணாசலம் செட்டியார் |
| 28 | ,, | மெ. நடேசன் செட்டியார் |
| 29 | ,, | சோம. தியாகராஜன் செட்டியார் |
| 30 | ,, | சுப. வீரப்ப செட்டியார் (பொந்தியாங்கிச்ச) |
| 31 | ,, | பழ. ராம. அருணாசலம் செட்டியார் |
| 32 | ,, | மு. ராம. இராமநாதன் செட்டியார் |
| 33 | ,, | எ. அ. ப. வீர. பழநியப்ப செட்டியார் |
| 34 | ,, | உ. ராம. பெ. ராம. இராமநாதன் செட்டியார் |
| 35 | ,, | சித. ராம. குமாரப்ப செட்டியார் |
| 36 | ,, | எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் |
| 37 | ,, | செ. சு. கதி. சுப்பையா செட்டியார் (சுப்பிங்கான்) |
| 38 | ,, | மெ. சிதம்பரம் செட்டியார் |
| 39 | ,, | அ. மு. வீர. கதி. வீரப்ப செட்டியார் (ரெங்கோன்) |
| 40 | ,, | கு. செ. மு. பெரி. காசிவிஸ்வநாதன் செட்டியார் |
| 41 | ,, | பெ.ப வி.வீர.பழ. வீரப்ப செட்டியார் (ஈந்தட்டா) |
| 42 | ,, | சு. வீர. மெ. வீரப்ப செட்டியார் |
| 43 | ,, | மு. ராம. சாத. சாத்தப்ப செட்டியார் |
| 44 | ,, | மு. உ. வீரப்ப செட்டியார் (பயிஞ்சலோ) |
| 45 | ,, | கு. ராம. வீரப்ப செட்டியார் (ஈப்போ) |
| 46 | ,, | ப. வடு. வி. நா. வீரப்ப செட்டியார் |
| 47 | ,, | அ. இராமசாமி செட்டியார் (மோல்மேன்) |
| 48 | ,, | சுப. சித. லெட்சுமணன் செட்டியார் (மோபி) |
| 49 | ,, | லெ. வீரப்ப செட்டியார் (மூவார்) |
| 50 | ,, | மெ. சொ. வீரப்ப செட்டியார் |

51 ,, வீர சுப. சு. கா. முத்துச் செட்டியார்
52 ,, பெ. ப. வி. பழ. இராமசாமி செட்டியார்
53 ,, அழ. ராம. இராமசாமி செட்டியார்
54 ,, சி. வீர. ராம. வீரப்ப செட்டியார் (சென்னை)
55 ,, அ. வயி. ராம சின்னக்கருப்பன் செட்டியார்
56 ,, ப.உ.கு.உ. அண்ணாமலைசெட்டியார் (கிள்ளான்)
57 ,, அரு. உ. வீர. அழகப்ப செட்டியார்
58 ,, மெ. வீர. வெ. நடேசன் செட்டியார்
59 ,, ராம. வெ. ராம. வெங்கிடாசலம் செட்டியார்
60 ,, ராம. அழ. கிருஷ்ணப்ப செட்டியார் (தைப்பிங்)
61 ,, சு. பழ. ராம. இராமசாமி செட்டியார்
62 ,, அ. மு. சித. முத்தையா செட்டியார்
63 ,, வீர. அரு. அருணாசலம் செட்டியார்
64 ,, லெ. ராம. லெ. லெட்சுமணன்செட்டியார் (மீச்சோ)
65 :; பெரி. கா. வெ. வெங்கிடாசலம் செட்டியார்
66 ,, அரு. பழ. அரு. பழநியப்ப செட்டியார்
67 ,, சுப.கரு.ராம. சுப்பிரமணியன்செட்டியார் (ரெங்கூன்)
68 ,, கதி. ராம. வீரப்பசெட்டியார்
69 ,, ராம. சுப்பிரமணியன் செட்டியார்
70 ,, சுப. நாராயணன் செட்டியார்
71 ,, மு. வினைதீர்த்தான் செட்டியார்
72 ,, வயி. வயிரவன் செட்டியார்
73 ,, ராம. முத்துக்கருப்பன் செட்டியார்
74 ,, வீர. இராமநாதன் செட்டியார் (B Sc.)
75 ,, பழ. வீர. பழனியப்ப செட்டியார்
76 ,, அரு. வீர. ராம. வீரப்ப செட்டியார்

கோட்டையூர்

77 ,, அழ. இராமசாமி செட்டியார்

## கௌரவ அங்கத்தினர்கள்.

---

திருவாளர் ஏ. பெரி. வீர. பெரியணன் செட்டியார்
" நா. அ. ச. சண்முகம் செட்டியார் (தமிழ் வித்துவான்)
" ப. வடு. பெரி. வீர. ராம. வீரப்ப செட்டியார் (சபிலா)
" கு. வீர. பழ. அ. பழநியப்ப செட்டியார் (சிங்கப்பூர்)
" ப. வடு. பெரி. ராம. காசிச்செட்டியார்
" அ. சு. பழ. வீர. இராமசாமி செட்டியார்
" எஸ். பி. வீரப்பா அவர்கள்
" சு. பி. வீர. பிச்சப்ப செட்டியார்
" வெ. பெரி. வீர. சோமசுந்தரம் செட்டியார்
" சி. ராம. சொ. சு. சொக்கலிங்கம் செட்டியார் (கண்டனூர்.)
" பண்டிட் ரெத்தினம் அவர்கள், (கண்டனூர்.)
" வள்ளியம்மை-அண்ணாமலை அவர்கள் (கோட்டையூர்)
" அ. கருப்பன் செட்டியார் (கோட்டையூர்)
" ஆவி. லெ. அருணாசலம் செட்டியார் (காரைக்குடி)
" ராய. சொக்கலிங்கம் அவர்கள் ("ஊழியன்" ஆசிரியர், காரைக்குடி)
" சொ. முருகப்பா அவர்கள் ("குமரன்" ஆசிரியர், காரைக்குடி)
" ஏ. எஸ். சர்மா அவர்கள் ("செட்டிநாடு" ஆசிரியர், காரைக்குடி)
" தி. ம. நடராஜன் அவர்கள் ("விஸ்வபந்து" ஆசிரியர், காரைக்குடி)

---

## அபிமானிகள்.

திருவாளர் அ. ப. சி. மு. சின்னையா செட்டியார்
" பெரி. அரு. நாகப்ப செட்டியார் (சயிலா)
" பழ. சு. பழ. பழனியப்ப செட்டியார்
" பழ. மு. பழ. வீர. முருகப்ப செட்டியார்
" வீர. கும. குமரப்ப செட்டியார்
" அ. ப. சி. வீர. சின்னையா செட்டியார்
" சி. வீர. சோம. வீரப்ப செட்டியார்
" சொ. அரு. சு. இராமசாமி செட்டியார்
" கு. லெ. லெட்சுமணன் செட்டியார்
" பெரி. அரு. வீரப்ப செட்டியார்
" அழ. கு. சித. சுப. சுப்பிரமணியன் செட்டியார், (ஈந்தட்டா)
" சுப. சித. சுப்பிரமணியன் செட்டியார்
" ப. மு. நா. முத்துக்கருப்பன் செட்டியார்
" செ. மெ. செ. சின்னையா செட்டியார்
" மு. சோமசுந்தரம் செட்டியார் (கிட்டா)
" ப. செ. பழ. சேதுராமன் செட்டியார்
" அ. மு. வீர. சா. வீரப்ப செட்டியார்
" ப. செ. பழ. வீரப்ப செட்டியார்

## பதினறுவதாண்டு விழா.

வெகுதானியஆண்டு சித்திரைத்திங்கள் 31-ம் நாள் காலை, மாலை இருவேளைகளிலும் சங்கத்தின் பதினறுவதாண்டு விழாவும், வித்தியாசாலையின் ஆறுவதாண்டு விழாவும் செந்தமிழ்ச் செல்வரும் தென்னுற்காடு ஜில்லா கல்வி அதிகாரியுமான கூடலூர் உயர்திரு

S. சச்சிதானந்தம் பிள்ளை B. A. L. T., D. E. O. அவர்கள் தலைமையில் திருப்பத்தூர் ரேஞ்சு கல்வி இலாகா டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. ராமச்சந்திர அய்யர் B.A.L.T. அவர்கள் "கல்வி" என்பது பற்றியும், காரைக்குடி "ஊழியன்" உதவிஆசிரியர் திரு E. சிவம்அவர்கள் "எதிர்கால காங்கிரஸ்" என்பதுபற்றியும், அத்தனைப்பேட்டை திரு. RM. கோவிந்தசாமி செட்டியார் அவர்கள் "தமிழரும் அரசியலும்" என்பதுபற்றியும் ஸ்ரீ சரஸ்வதிவித்தியாசாலை மாணவமாணவிகளால் பாட்டு, பேச்சு, நடிப்பு, சட்டசபை நடிப்பு முதலியவைகளும், இரவு 10 மணிக்கு திரு. SP. வீரப்பா அவர்களால் எழுதி பயிற்றுவிக்கப்பெற்ற "தீனபந்து அல்லது தேசத்தொண்டு" என்னும் நாடகத்தை ச. வி. மாணவ மாணவிகளால் காரைக்குடி முனிசிபல் கவுன்சிலர் திரு. ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் பக்கவாத்தியங்களுடன் நடிக்கப்பெற்று விழாவும் நன்கு நிறைவெய்தியது. அது சமயம் தலைமைவகித்த திரு. ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரமும், பயிற்றுவித்த திரு. SP. வீரப்பா அவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரமும் வித்தியாசாலையின் சார்பாக ஓர் பொற்பதைக்கமும் அளிக்கப்பெற்றது.

---

## மாதக்கூட்டங்கள்.

வெகுதானிய ஆண்டு வைகாசித்திங்கள் முதல் பங்குனித் திங்கள்வரை பல அறிஞர்கள் தலைமையில் அன்பர்கள் பலரின் சொற்பொழிவுகளுடனும், ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவ மாணவிகளின் பாட்டு, பேச்சு, நடிப்புகளுடனும் மாதக்கூட்டங்கள் பதினொன்று நடைபெற்றன.

## ஜீவகாருண்யப் பிரசாரம்.

சாக்கை ஸ்ரீ உய்யவந்தம்மன் உற்சவத்தில் நடைபெறும். பலிப்பொங்கலை நிறுத்துவான்வேண்டி சங்கத்தின் சார்பில் வெகுதானிய ஆண்டு ஆனித்திங்கள் 15-ம் நாள் இரவு 8 மணிக்கு சங்கத்தின் அங்கத்தினர்களாலும், வித்தியாசாலை ஆசிரியர்கள் மாணவர்களாலும் பிள்ளையார் கோவில் ஊரணியின் மேல்கரையில் பிரசங்கங்கள் நடாத்தப்பெற்று துண்டுப்பிரசுரங்களும் வழங்கப் பெற்றன.

---

## காந்தி ஜெயந்திவிழா.

வெகுதானிய ஆண்டு புரட்டாசித்திங்கள் 13-ம் நாள் மாலையில் மஹாத்மா காந்தியடிகளின் திருவுருவப்படத்தை காரில்வைத்து அலங்கரித்து ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை மாணவ மாணவிகள் தேசியகீதம் பாடிவர சங்கத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு முக்கிய தெருக்களில் பவனிவந்து நேரு சதுக்கத்தில் சென்னை சட்ட சபை அங்கத்தினரும், தேசபக்தருமான திருச்சி திரு. N. ஹாலாஸ்யம் அய்யர் B.A.B.L., M.L.A. அவர்களின் தலைமையில் மஹாத்மா காந்தியடிகளின் 70-வது பிறந்த தினக்கொண்டாட்டத்தை பொதுக்கூட்டத்தின்மூலம் நமது சங்கத்தின் சார்பிலும், இந்நகர் கிராம காங்கிரஸ் கமிட்டியின் சார்பிலும் கொண்டாடப்பெற்றது. விழாவில் கலந்துகொண்ட மாணவமாணவிகளுக்கு காந்தியடிகளின் சரித்திரப்புத்தகம் இனமாக வழங்கப்பெற்றது.

ஷை விழாவிற்குரிய செலவில் சங்கத்திற்குரிய பகுதியை திரு. சா. சிதம்பரம் செட்டியார், திரு. பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார், திரு. சித. இராமசாமி செட்டியார், திரு. சோம. இராமசாமி செட்டியார் ஆகியவர்கள் பொருள் உதவியுள்ளார்கள்.

---

## கலைமகள் விழா.

வெகுதானிய ஆண்டு புரட்டாசித்திங்கள் 16-ம் நாள் வெள்ளியினுல் செய்யப்பெற்ற ஸ்ரீ சரஸ்வதி தேவியின் விக்கிர கத்தை தேரில்வைத்து அலங்கரித்து மேளவாத்திய கோஷத்துட னும், ச. வி. மாணவ மாணவிகளின் தேசிய தோத்திரமுடனும் ஸ்ரீ சரஸ்வதி தேவியின் ரதாரோகண விழா ஆரம்பமாகி தேரு சதுக்கத் திற்கு வந்ததும் வித்தியாசாலை மாணவிகளால் கோலாட்டம், கும்மி முதலியவைகளும், மாணவர்களால் இசைக்கேற்ப தேகப்பயிற்சி நடைபெற்றதும் பவனிவந்து சங்கத்தில் பூஜை நடாத்தி வந்திருந் தோர் அனைவருக்கும் வினியோகங்கள் வழங்க விழா இனிது நிறை வெய்தியது.

மேற்படிவிழா திரு. வீர. பழ. வீனதீர்த்தான் செட்டியார், திரு. எ.ராம.வீர.பழ. முத்துவள்ளியப்பசெட்டியார், திரு. எ. பெரி. வீர. சோலையப்ப செட்டியார், திரு. சித.ராம. குமாரப்ப செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியினுல் நடைபெற்றது.

---

## வ. உ. சிதம்பரம் பிள்ளை தினம்.

வெகுதானிய ஆண்டு கார்த்திகைத்திங்கள் 13-ம் நாள் கோட்டையூர் ஜில்லாபோர்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் தலைமை ஆசிரியர் திரு. எஸ். மாணிக்கம் அய்யரவர்கள் தலைமை யில் காலஞ்சென்ற தேச பக்தர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்க ளின் தினம் கொண்டாடப்பெற்றது.

---

## அனுதாபக்கூட்டம்.

துருக்கி சர்வாதிகாரி கமால்பாஷா அவர்கள் காலமான தைக்குறித்தும், சென்னை அரசாங்க ஜெயில் நீதி மந்திரி கனம்

கே. ராமன்மேனன் அவர்களின் அகால மரணம் குறித்தும் அநுதாபத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றது.

---

## வாசகசாலே.

இச்சங்கத்தின் சார்பில் வாசகசாலே ஒன்று நடைபெற்று வருகின்றது. அதில் 470 புத்தகங்கள் இருக்கின்றன. தினப் பதிப்பு, வாரப்பதிப்பு, மாதப்பதிப்பு ஆகிய பத்திரிகைகள் வர வழைக்கப்படுகின்றன. பல அன்பர்கள் வந்து வாசித்து வருகின் றார்கள்.

---

## நன்கொடை.

திரு. சித. வயி. வயி. வுக்கு நடைபெற்ற திருமணத்தில் ரூ 5-ம், திரு. அ. வயி. ராம. சி. வுக்கு நடைபெற்ற திருமணத் தில் ரூ 5-ம், திரு. மெ. வீர. வெ. ந. மகன் சிதம்பரம் காப்புக் கட்டுப் புதுமையில் ரூ 7-ம், திரு. மு. வி. மகள் உண்ணுமலேக்கு நடைபெற்ற திருமணத்தில் ரூ 11-ம், திரு. சித. உ. உ. வீர. மகன் உடையப்பனுக்கு நடைபெற்ற காப்புக்கட்டுப்புதுமையில் ரூ 3-ம், நன்கொடை உதவியுள்ளார்கள். அவர்கட்கு எங்களது நன்றி உரியதாகுக.

---

## பத்திரிகைக்கு நன்கொடை உதவியவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சுதேசமித்திரன் | .... | தினப்பதிப்பு | சங்கம் |
| ஆனந்தவிகடன் | .... | வாரப்பதிப்பு | ,, |
| குமரன் | .... | ,, | ,, |


| | | | |
|---|---|---|---|
| செட்டிநாடு | .... | ,, | சங்கம் |
| தனவணிகன் | .... | ,, | ,, |
| ஹிந்துஸ்தான் | .... | ,, | அரு. உ. வீர. அழகப்ப செட்டியார். |
| நல்வழி | .... | மாதப்பதிப்பு | அ. நாகப்பசெட்டியார் |
| ஜோதி | .... | ,, | பர்மா அன்பர். |

---

## புத்தகங்கள், சாமான்கள் நன்கொடை உதவியவர்கள்.

| | | |
|---|---|---|
| பழ. மு. பழ. வீர. வள்ளியம்மை ஆச்சி | பெரியமுறித்தவலை | 1 |
| | சிறிய அடுக்குச்சட்டி | 5 |
| மெ. சிதம்பரம் செட்டியார் ... | புத்தகம் | 4 |
| | கிளாஸ் டேபிள் புஷ்பஸ்டாண்டு | 1 |
| சா. சிதம்பரம் செட்டியார் .... | புத்தகம் .... | 6 |
| அ. பெ. வீர. ... | புத்தகம் .... | 1 |
| அ. நா, சுப. நா, வீர. சோ. மைசூர் பிரயாணத்தின் ஞாபகார்த்தமாக | பேப்பர் வெயிட் | 1 |
| | பின்ஸ்டாக் | 1 |
| | புத்தகம் | 1 |
| அ. சு. நா. சுப. வள்ளியம்மைஆச்சி | முறித்தவலை | 1 |
| | செம்பு | 2 |
| | முறிலோட்டா சி. பெ. | 2 |
| | பித்தளைக்குவளை சி.பெ. | 2 |
| | அறி கரண்டி | 2 |
| | கரண்டி சி. பெ. | 3 |
| நா. அ. சு. சண்முகம் செட்டியார் | தமிழ் புத்தகங்கள் | 48 |
| | படம் ... | 1 |

| | | |
|---|---|---|
| சே.பழ, மெ.சித. வடஇந்திய சுற்றுப்பிரயாணத்தின் ஞாபகார்த்தமாக | புத்தகம் ... | 1 |
| | மானேஜர் தகடு | 1 |
| SP. வீரப்பா அவர்கள் .... | புத்தகம் .... | 4 |
| கோட்டையூர் அழ. ராமசாமிசெட்டியார் | படம் ... | 3 |
| அரு. ப. மு. ராம. ந. விசாலாட்சி ஆச்சி | கொழும்புக்கேத்தல் | 1 |
| கோட்டையூர், லெ. ராம. இராமசாமி செட்டியார் | புத்தகம் | 12 |
| யே. சித. சொ. லெட்சுமி ஆச்சி | மரப்பெட்டகம் ... | 1 |
| வீர. யே. அண. கண்ணம்மை ஆச்சி | தாம்பூரத்தவலை .... | 1 |
| | பித்தளைப்போகிணி அண்டா | 1 |
| பழ. ப. ப. வீர. வீரப்ப செட்டியார் | படம் .... | 1 |
| காரைக்குடி ராம்ஸ் அண் கோ .... | .... படம் | 1 |
| பழ. மெ. வள்ளியம்மை ஆச்சி .... | மூக்குச் சட்டி | 1 |
| | செம்பு | 1 |



புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் ஆறுவதாண்டு ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும்.

உ
சிவமயம்

# புதுவயல்
# ஸ்ரீசரஸ்வதிவித்தியாசாலையின்
# ஏழாவதாண்டு
# அறிக்கை.

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் இச்சங்கத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகிய கல்வியை வளர்க்கும்பொருட்டு ஸ்ரீசரஸ்வதி வித்தியாசாலை என்ற பெயருடன் ஆங்கிரஸ ஆண்டு தைத்திங்கள் 4-ம் நாள் (16—1—1933)ல் ஆரம்பிக்கப்பெற்று தற்பொழுது ஏழு ஆண்டுகள் நிறைவெய்தி எட்டாம் ஆண்டு ஆரம்பமாகின்றது.

**கல்வி முறை.**

சிறுவர் சிறுமியர்களுக்கு தமிழ்க்கல்வி, ஆங்கிலம், கணக்கு, சரித்திரம், பூகோளம், சயன்ஸ், சுகாதாரம், இராஜாங்கமுறைநூல், இலக்கணம், இலக்கியம், தேவாரம், சித்திரம் ஆகிய பாடங்களும், கைத்தொழில், தேகாப்பியாசம், பாட்டு, பேச்சு, நடிப்பு முதலியவைகளும், சிறுமியர்களுக்கு கும்மி, கோலாட்டமும் பயிற்றுவிக்கப்பெறுகின்றன.

காரியதரிசி:

திருவாளர் பெ.ப.வி.அரு. ராமசாமி செட்டியார்

உதவிக்காரியதரிசி:

,, அ. நாகப்ப செட்டியார்

வெகுதானிய-ஸ்ரீ பங்குனி-மீ 2உ வரை.

கமிட்டி மெம்பர்கள் { திரு. வீர.பழ. வினைதீர்த்தான் செட்டியார்
,, சுப. நாராயணன் செட்டியார்

## ஆசிரியர் மாணவர்

| ஆண்டு | ஆசிரியர் | ஆசிரியை | வகுப்புகள் | மாணவர்கள் | மாணவிகள் |
|---|---|---|---|---|---|
| முதலாவது | 2 | 1 | 4 | 28 | 34 |
| இரண்டாவது | 3 | 2 | 4 | 40 | 38 |
| மூன்றாவது | 5 | 1 | 5 | 40 | 39 |
| நான்காவது | 6 | 1 | 6 | 59 | 52 |
| ஐந்தாவது | 6 | 1 | 6 | 70 | 63 |
| ஆறாவது | 7 | 1 | 6 | 87 | 64 |
| ஏழாவது | 8 | ... | 6 | 92 | 68 |

## ஆசிரியர்கள்

1. P. சுப்பையா அய்யர் அவர்கள், தலைமை ஆசிரியர்
2. P. பூதலிங்கம் அவர்கள்
3. S. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள்
4. K. நாகசுப்பிரமணியம் அவர்கள்
5. R. சுப்பிரமணியம் அவர்கள்
6. K. சுப்பையா அவர்கள்
7. S. கிருஷ்ணய்யங்கார் அவர்கள்
8. T. சிவலோகநாததேசிகர் அவர்கள் (தேவார ஆசிரியர்)

## புத்தகசாலை.

மாணவர் நூல் நிலையத்தில் கல்வி சம்பந்தமாக 322 புத்தகங்கள் இருக்கின்றன.

---

## உபகரணங்கள்.

மாணவமாணவிகளின் பயிற்சிக்குரிய நாணயங்கள்,பொருட் பாடப் படங்கள், தேசப்படங்கள், குளோப் (Globe) தையல் மிஷின் முதலியனவும் இன்னும் பல உபகரணங்களும் ஆர்மோனியமும் இருக்கின்றன.

---

## புக்ஸ்டால்.

மாணவ மாணவிகளுக்கு வேண்டிய பாடப்புத்தகங்கள், ஸ்டேஷனரி சாமான்கள் முதலியன வித்தியாசாலையின் சார்பில் விற்பனைசெய்யப்பெறுகின்றன.

---

## "தீனபந்து அல்லது தேசத்தொண்டு"

வித்தியாசாலையின் நிதிக்காக திரு. SP. வீரப்பா அவர்களால் எழுதி பயிற்றுவிக்கப்பெற்றதை ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை டிராமடிக் சொசைட்டியாரால் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் 16-ம் ஆண்டு விழாவன்றிரவு காரைக்குடி திரு. ஆரு.ஆ.ராம. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் தலைமையில் "தினபந்து அல்லது தேசத்தொண்டு" எனும் நாடகத்தை கட்டணத்துடன் அதிவிமரிசையாக நடாத்திக் காண்பிக்கப்பெற்றது.

## விழாக்கள்.

வருடப்பிறப்புவிழா, திருவள்ளுவர்விழா, விநாயகர்சதுர்த்தி விழா, பாரதிவிழா, காந்திஜெயந்திவிழா, கலைமகள்விழா, கிலிக்கி எடுப்புவிழா, விஜயதசமிவிழா, தைப்பொங்கல்விழா, ஆகியவிழாக்கள் கொண்டாடப்பெறுகின்றன.

குறிப்பு:— விநாயகர் சதுர்த்தி விழா, திரு. அ. இராமசாமி செட்டியார், திரு.லெ. இராமநாதன்செட்டியார், திரு. மெ. சிதம்பரம் செட்டியார்.
கிலிக்கிஎடுப்புவிழா, திரு. வீர. பழநியப்பசெட்டியார்
விஜயதசமிவிழா, திரு. சே. பழநியப்ப செட்டியார், திரு. அ. அழ. அண்ணாமலை செட்டியார், திரு. கா. அருணாசலம் செட்டியார் ஆகியவர்களின் பொருளுதவியினால் நடைபெற்றன.

---

## திருமறைப் பணி

வெகுதானிய ஆண்டு ஆனித்திங்கள் 26-ம் நாள் மாலை சாக்கை ஸ்ரீ வீரசேகர உமையாம்பிகைக்கு நடைபெற்ற உற்சவத்தின் 5-வது நாள் தபசுக்காக்ஷி சமயம் வித்தியாசாலை மாணவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் தேவாரம் பாடப்பெற்றது.

---

## பரீக்ஷை.

இவ்வாண்டில் 7—4—39௳ முதல் 11—4—39௳ வரை அமராவதிபுதூர் சுப்பிரமணியன் செட்டியார் குருகுல தலைமை ஆசிரியர் திரு. நடராஜன் அவர்களால் வருடப்பரீட்சை நடாத்தப்பெற்றது.

---

## மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள்

வித்தியாசாலையின், ஆருவதாண்டுவிழாவில் மாணவமாணவிகளுக்கு வகுப்புத்தேர்ச்சிப்பரிசுகள், நீண்டநாள் வந்தவர்களுக்கு பரிசுகள், சுத்தமாக வந்தவர்களுக்குப் பரிசுகள், பெண்களுக்கு கைத்தொழில் பரிசுகள் ஆகியவைகள் திரு. எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் அவர்களின் பொருளுதவியால் கொடுக்கப் பெற்றன.

---

## அரசாங்க அங்கீகாரம்

அரசாங்கத்தாரால் அங்கிகரிக்கப்பெற்று பொருள் உதவி (Grand)செய்துவந்த இந்நகர் பங்களாஸ்கூல் மானேஜ்மெண்டை 1–7–1938 முதல் ஒப்புக்கொள்ளப்பெற்று அத்துடன் இணைத்து கவர்ண்மெண்டு கல்வி இலாகா முறைப்படி நடைபெற்று வருகின்றது.

---

## போஷகர்கள்

| | | |
|---|---|---|
| திரு. | பெ.ப.வி.அரு. வெள்ளச்சி ஆச்சி | ரூ. 505-10-0 |
| ,, | எ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் .... | ரூ. 120 |
| ,, | பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார் | ரூ. 120 |
| ,, | அ. சு. பழ. வீர. இராமசாமி செட்டியார் | ரூ. 70 |
| ,, | எ. அ. ப. வீர. பழனியப்ப செட்டியார் ... | ரூ. 60 |
| ,, | வீர. பழநியப்ப செட்டியார் | ரூ. 25 |
| ,, | வீர. சோலையப்ப செட்டியார் .... | ரூ. 25 |
| ,, | ப. வடு. வி. நா. வீரப்பசெட்டியார் .... | ரூ. 25 |
| ,, | ராம. வெ. ராம. வெங்கிடாசலம் செட்டியார் | ரூ. 25 |
| ,, | ராம. அழ. கிருஷ்ணப்ப செட்டியார் .... | ரூ. 25 |

மேல் குறிப்பிட்டவர்கள் வெகுதானிய ஆண்டில் வித்தியாசாலை கமிட்டிக்கு நன்கொடையாக ரூ. 1000—10—0 உதவி இருக்கின்றார்கள்.

---

## புத்தகங்கள், சாமான்கள் நன்கொடை உதவியவர்கள்.

| | | |
|---|---|---|
| சென்னை ஆசிரியர் நூற்பதிப்புக்கழகத்தார் | புத்தகம் | 15 |
| மதுரை பி. கா. சிதம்பர முதலியார் | ,, | 5 |
| மெ. சிதம்பரம் செட்டியார் | ,, | 1 |
| பள்ளத்தூர் காந்தி அண்ணாமலை அவர்கள் | ,, | 1 |
| கா. முத்து அவர்கள் | படம் | 1 |
| சா. சிதம்பரம் செட்டியார் | புத்தகம் | 1 |
| அ. நாகப்ப செட்டியார் | ,, | 1 |
| வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார் | ,, | 1 |
| மதுரை P. கிருஷ்ணன் B. A. L. T. | ,, | 2 |
| சென்னை B. G. பால் & Co., | ,, | 5 |
| அமராவதிபுதூர் மு. அ. ஓட்டுமில் | மண் சாமான்கள் | 31 |

---

## வித்தியாசாலையின் புதிய கட்டிடம்.

திருவாளர் அழ. பெரி. வீர. ராம. அவர்கள் குடும்பத்தாரால் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக்கு நன்கொடையாக அளிக்கப்பெற்ற இடத்தில் வெகுதானிய ஆண்டு சித்திரைத்திங்கள் 20-ந் நாள் நம் நாட்டு வழக்கப்படி தச்சுசெய்தும், 31-ம் நாள் தென்னாற்காடு ஜில்லா கல்விஅதிகாரி கடலூர் உயர்திரு. S. சச்சிதானந்தம்பிள்ளை B. A. L. T., அவர்களால் கல் நாட்டுவிழா செய்யப்பெற்றும், ஆவணித்திங்கள் 27-ம் நாள் நிலைவைத்தும், பல அன்பர்களின் பொருளுதவியைக் கொண்டு கட்டிடவேலைகள் இனிதே பூர்த்தியாகி, இன்று செட்டிநாடு கனம் டாக்டர் ராஜா சர். அண்ணாமலை செட்டியாரவர்களால் திறப்புவிழாச் செய்யப்பெற்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

---

## ஏழாவதாண்டு விழாவில் பரிசு பெறுபவர்கள்.

### வகுப்புப் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 6-வது வகுப்பு | முதற் பரிசு | ஸ்ரீ. கிருஷ்ணன் |
| ,, | 2-வது பரிசு | சே. உமையாள் |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | திரு. கிருஷ்ணன் |
| ,, | 2-வது பரிசு | சுப. நடேசன் |
| 4 வது வகுப்பு | முதற் பரிசு | பெரி. சிவனடியான் |
| ,, | 2-வது பரிசு | S. ராமநாதன் |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | பெரி. விசாலாட்சி |
| ,, | 2-வது பரிசு | ந. செல்லம் |
| 2-வது வகுப்பு | முதற் பரிசு | அழ. வீரப்பன் |
| ,, | 2-வது பரிசு | அ. நாச்சம்மை |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | பழ. சிவகாமி |
| ,, | 2-வது பரிசு | S. சீதாலெட்சுமி |

---

### நீண்டநாள் வந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| 6-வது வகுப்பு | முதற் பரிசு | ஸ்ரீ. கிருஷ்ணன் |
| ,, | 2-வது பரிசு | G. S. கிருஷ்ணமூர்த்தி |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | திரு. கிருஷ்ணன் |
| ,, | 2-வது பரிசு | சுப. சீனிவாசன் |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | வீர. மெய்யப்பன் |
| ,, | 2-வது பரிசு | லெ. சுப்பையா |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | சுப. சொர்ணவல்லி |
| ,, | 2-வது பரிசு | பழ. சீதை |

| | | |
|---|---|---|
| 2-வது வகுப்பு | முதற் பரிசு | பெரி. சிதம்பரம் |
| ,, | 2-வது பரிசு | சுப. உமையாள் |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | அரு. வள்ளியம்மை |
| ,, | 2-வது பரிசு | வீர. உமையாம்பாள் |

## சுத்தமாக வந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| 6-வது வகுப்பு | முதற் பரிசு | ஸ்ரீ. கிருஷ்ணன் |
| ,, | 2-வது பரிசு | G. S. கிருஷ்ணமூர்த்தி |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | வ. நாராயணன் |
| ,, | 2-வது பரிசு | பெரி. இராமசாமி |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | வீர. மெய்யப்பன் |
| ,, | 2-வது பரிசு | பெரி. சிவனடியான் |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | சுப. சொர்ணவல்லி |
| ,, | 2-வது பரிசு | கா. பாகீரதி |
| 2-வது வகுப்பு | முதற் பரிசு | ராம. தெய்வானை |
| ,, | 2-வது பரிசு | ஆரு. அழகம்மை |
| 1-வது வகுப்பு | முதற் பரிசு | அரு. வள்ளியம்மை |
| ,, | 2-வது பரிசு | அ. நடராஜன் |

## கைத்தொழில் பரிசு.

| | | |
|---|---|---|
| 6-வது வகுப்பு | பரிசு | சே. உமையாள் |
| 5-வது வகுப்பு | முதற் பரிசு | சுப. உமையாள் |
| ,, | 2-வது பரிசு | சித. முத்தாயி |
| 4-வது வகுப்பு | முதற் பரிசு | வீர. சீதை |
| ,, | 2-வது பரிசு | சொ. சாத்தகி |
| 3-வது வகுப்பு | முதற் பரிசு | ந. செல்லம் |
| ,, | 2-வது பரிசு | கரு. காந்திமதி |

# புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் கணக்கு.

வெகுதானிய-ஷ பங்குனி-மீ 31உ வரை.

| விபரம். | | வரவு | | | பற்று | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ | அ | பை | ரூ | அ | பை |
| ஸ்ரீ விநாயகர் வரவு | ... | 2 | 2 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு | .... | 2 | 2 | 0 | | | |
| ஆதாய வரவு | ... | 46 | 1 | 9 | | | |
| நன்கொடை வரவு | .... | 345 | 0 | 0 | | | |
| சந்தா வரவு | ... | 1194 | 5 | 0 | | | |
| சாமான் கொள்முதல் பற்று | .... | | | | 197 | 12 | 9 |
| புத்தகம் கொள்முதல் பற்று | .... | | | | 11 | 12 | 0 |
| மாதக்கூட்டச் சிலவு கணக்கு | ... | | | | 126 | 9 | 6 |
| விசேடக் கூட்டச்சிலவு கணக்கு பற்று | | | | | 81 | 15 | 9 |
| சில்லரைச் சிலவு கணக்கு பற்று | ... | | | | 230 | 14 | 9 |
| ஆண்டுவிழாக் கணக்கு பற்று | ... | | | | 677 | 0 | 9 |
| வாசகசாலை பற்று | .... | | | | 224 | 13 | 3 |
| இருப்பு | ... | | | | 38 | 12 | 0 |
| ஆக ரூ | .... | 1589 | 10 | 9 | 1589 | 10 | 9 |

## புதுவயல் ஸ்ரீசரஸ்வதி வித்தியாசாலையின் கணக்கு.

வெகுதானிய-ஹு பங்குனி-மீ 31௳ வரை.

| விபரம். | | வரவு | | | பற்று | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ | அ | பை | ரூ | அ | பை |
| ஸ்ரீ விநாயகர் வரவு | ... | 2 | 10 | 0 | | | |
| ஸ்ரீ சரஸ்வதி வரவு | .... | 0 | 14 | 0 | | | |
| ஆதாய வரவு | .... | 281 | 5 | 6 | | | |
| நன்கொடை வரவு | .... | 5035 | 10 | 0 | | | |
| பிள்ளைகள் சம்பள வரவு | .... | 2505 | 7 | 0 | | | |
| கைத்தொழில் சாமான் வித்த வரவு | .... | 55 | 15 | 3 | | | |
| ச. வி. மாணவ டிருமாடிக் சொசைட்டி. வரவு முன் ரூ. 538—3—0 மும், "தின பந்து" நாடகத்தில் வரவு ரூ. 1487க்கு செலவு ரூ. 747—10—9 நீக்கி ரூ. 739—5—3 மும் ஆக ரூ. | .... | 1277 | 8 | 3 | | | |
| 2வது ஆண்டில் நடத்திய "வசிகர சுந்தரி" நாடகப் பற்று | .... | | | | 390 | 0 | 0 |
| சாமான் கொள்முதல் பற்று | .... | | | | 279 | 12 | 0 |
| சம்பளச் செலவு | .... | | | | 6337 | 13 | 3 |
| ஸ்டேஷனரிச் செலவு | ... | | | | 276 | 0 | 6 |
| சில்லரைச் செலவு | ... | | | | 873 | 11 | 3 |
| பெரி. வீர. சாம. பற்று | .... | | | | 800 | 0 | 0 |
| கட்டிட பற்று | .... | | | | 50 | 0 | 0 |
| கைமாத்து பற்று | .... | | | | 66 | 0 | 0 |
| இருப்பு | ... | | | | 86 | 1 | 0 |
| ஆக ரூ. | .... | 9159 | 6 | 0 | 9159 | 6 | 0 |

## வேண்டுகோள்.

மந்திர தந்திரங்கள் கற்றலும், வானையும் மீனையும் அளத்தலு மாகிய நண்புலன் வளர்ச்சியில் படிந்து இமைப்பொழுதினும் நொடிப்பொழுதினும் பிரமிக்கும் வண்ணம் முன்னேறிவரும் இத் தற்கால உலகத்தில் அறிவுச்செல்வம் தவிற வேறு எச்செல்வமும் சிறப்பு எய்தாது அன்றியும்,

> "அறிவுடையா ரெல்லா முடைய ரறிவிலா
> ரென்னுடைய ரேனுமிலர்"

எனச் சாற்றும் தமிழ்மறையின் நுட்பத்தையும் ஆழ்ந்து நோக்கு வோமாக.

மனிதனை, மனிதனுக்குவதற்குரிய தனிப்பெருமை அறி வுடைமைக்கே, ஆகவே அறிவுடைமையை விருத்திசெய்வதில் நாம் பலவகையினும் சலியா உழைப்பெடுத்துக் கொள்வோம். வீடுகள் தோறும் கலைகள் விழங்கவேண்டும். வீதிகள்தோறும், நாடுகள் முற்றிலும் நகரங்கள் எங்கனும் பள்ளிகள் தோன்றவேண்டும். அன்றுதான் நமது நாட்டிற்குப் புதுயுகம் பிறக்கவிருக்கின்றது. அன்றே நமது நாட்டினர் அறிவு ஒளிவீசும், ஞானக்கதிர்களாய்த் திகழ்வார்கள். அன்றுதான் நம்மைப் பீடித்துள்ள வறுமையும், மடமையும் தொலையும். சோவாரீர் ஜெகத்திரே யாங்கனும் பள் ளிகள் நிறுவி யாவரும் நிறைந்த ஞானம் படைத்தவராய் விளங்க உழைப்பெடுப்போம்.

அறிவு படைத்தோரை மக்களெனவும், அற்றோரை மாக்க ளெனவும் கொள்ளுதல் தமிழ் மரபு. தமிழர்களாகிய நாம் நமது புராதனமானதும், புனிதமானதுமான மரபுபற்றி வாழ முற்படு வோம்.

நாட்டின் தேவையையும், நமது கடமையையும் உணர்ந்தே இச் சங்கத்தின் சார்பில் இவ் வித்தியாசாலையை ஸ்தாபித்து ஆறு ஆண்டுகளாக எங்களாலியன்றவரை உயரிய முறையில் கல்வி போதித்து வருகின்றோம். இன்னும் சிறந்தமுறையில் போதித்துவர வேண்டுமென்பதில் பேரார்வமுடையவர்களாய் இருக்கின்றோம்.

காரிய வெற்றிக்கு ஆர்வம் ஓர் பெரிய சாதனம் ஆகுமே யொழிய, ஆர்வமே காரிய வெற்றியாகிவிடாது. பெற்றோர்கள், மற்றோர்கள் ஆதரவும் எங்களுக்குப்பெரிதும் வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளின் கல்வியில் பெரிதும் நாட்டம் கொண்டு தவறாது தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கனுப்பி வித்தியாசாலையை மேன்மையினின்னும் மேலான மேன்மைக்கு வரச்செய்வதுடன், கல்வி அபிவிருத்தியில் குன்றாத ஆர்வம் உடையார் ஒவ்வொருவரும் போஷகர்களாகச்சேர்ந்து இவ் வித்தியாசாலையானது கலையொளி பரப்பும் ஞானசூரியனாக விளங்குவதற்குரிய பொருள் உதவிபுரிந்து முற்போக்கான சிந்தையுடையார் ஒவ்வொருவரும் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து பொதுநல நன்மைக்குச் சேவைசெய்து சங்கத்தையும் வித்தியாசாலையையும் ஆதரித்துவரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

---

## நன்றியறிவித்தல்.

நமது சங்கமும், வித்தியாசாலையும் வளர்ந்தோங்கி வரவேண்டுமென்ற பேரவாவினால் தங்களுடைய வேலைகளை யெல்லாம் பொருட்படுத்தாது வைக்கங்கொண்டு உழைத்துவரும் அங்கத்தினர்களுக்கும், அபிமானிகளுக்கும், பெரியோர்களுக்கும் வித்தியாசாலை வளர்ச்சி கருதி பொருள் உதவிசெய்துவரும் போஷகர்களுக்கும்,

புத்தகங்கள், பத்திரிகைகள், சாமான்கள், நன்கொடைகள் முதலிய உதவிய அன்பர்களுக்கும், தாய்மார்களுக்கும், ஆண்டுவிழா மாதக்கூட்டங்களில் தலைமை தாங்கிய அறிஞர்களுக்கும், விரிவுரைகள் நிகழ்த்திய அறிஞர்களுக்கும், சங்கம், வித்தியாசாலை இவைகளை பார்வையிட்டு நல்லுரை வழங்கிய பெரியார்களுக்கும், ஊக்கத்துடன் கல்வி போதித்துவரும் வித்தியாசாலை ஆசிரியர்களுக்கும், பிள்ளைகளை தினந்தோறும் தவறாது கல்வி பயில அனுப்பிவரும் பெற்றோர்களுக்கும், நமது நிகழ்ச்சிகளைத் தாமதியாது பிரசுரித்துவந்த பத்திரிகை ஆசிரியர்களுக்கும், இச் சங்கத்திற்கு கட்டிடம் தந்துதவிய திரு. எ. பெரி. குடும்பத்தார் அவர்களுக்கும், வித்தியாசாலைக்கு கட்டிடம் தந்துதவிய திரு. பெரி. வீர. ராம. குடும்பத்தார் அவர்களுக்கும், வாசகசாலைக்கு கட்டிடம் தந்துதவிய திரு. சித. ராம. அவர்களுக்கும், ஆண்டுவிழாவிற்கு இடம்தந்துதவிய திரு. பெரி. அழ. வீர. அழ. அவர்களுக்கும், சங்கத்தையும், வாசகசாலையையும் ஒருங்கேகொண்ட வித்தியாசாலையின் புதிய கட்டிடத்திற்கு இடமும், பொருளும், சாமான்களும் கொடுத்துதவிய அனைவர்களுக்கும், கட்டிடம் சிறந்த முறையில் நிகழ பெருந்தொண்டினைச்செய்த அன்பர்கள் அனைவர்களுக்கும், சங்கத்தின் புத்தகாலயத்திற்கு சிறந்த காவியங்களாகிய புத்தகங்களை அளித்து அதன் குறிப்பும் அச்சிட்டுத்தந்த நமது நகர் தமிழ் வித்துவான் திரு. நா. அ. ச. சண்முகம் செட்டியாரவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியறிதலை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

---

நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் லருளீர்
ஆண்மையாள ருழைப்பினை நல்கீர்
மதுரத்தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணிபூசைக் குரியன பேசீர்
எதுவும்நல்கி இங்கெவ் வகையானும்
இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர்

---

தங்கள் அன்புள்ள,

**மெ. சிதம்பரம்,**

காரியதரிசி.

## அபிப்பிராயம் தந்தவர்கள்.

புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தினர் வைத்து நடத்திவரும் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் ஆறும் ஆண்டு விழாவும் சங்கத்தின் 16-ம் ஆண்டு விழாவும் இனிது நிறைவேறின. இந்நன்னாளில் தலைமைதாங்கிக் கலந்துகொள்ளும்பேறு எனக்கு அன்புடன் அளிக்கப்பட்டது. சங்கம் தன் 16ம் ஆண்டு நிறைவுற்ற பருவத்தில் தனது வித்தியாசாலைக்கு தக்கதோர் கட்டிடம் கட்டமுற்பட்டு, இன்று கால்கோள் விழாவும் கவினுறக்கொண்டாடியது. வித்தியாசாலையின் மாணவ, மாணவிகள் பலர் தமது பேச்சு, பாட்டு, நடிப்புகளில் காட்டிய திறமை பெரிதும் பாராட்டத்தக்கதாயுள்ளது. இன்றிரவு அவர்கள் நடித்த 'தீனபந்து' என்னும் நாடகம் கண்டோர் அனைவர் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து விளங்கிற்று. தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதனவாகிய உணர்ச்சிகளும், குறிக்கோள்களும், செயல்முறைகளும், பாடசாலை சிறுவர், சிறுமியர்க்குமட்டுமின்றிப் பொதுஜனங்கட்கும் இவ்வித்தியாசாலையின் வாயிலாக நல்கப்பெறுகின்றன. இத்துணைச் சிறப்பு வாய்ந்த தொண்டாற்றிவரும் சங்கமும், வித்தியாசாலையும் வளர்பிறை மதியென என்றும் வளர்ந்து மன்னி வாழ்வதாக.

(Sd) ச. சச்சிதானந்தம் பிள்ளை,
(தென்னாற்காடு ஜில்லா கல்வி அதிகாரி.)
13—5—38

புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை ஆண்டு விழாவிற்கு யானும் அழைக்கப்பெற்றமை குறித்து மகிழ்வெய்துகிறேன். தமிழ்நாட்டில், நிறம்படத் தமிழர் முறையில், தமிழர் உணர்ச்சியில்' தமிழர் முன்னேற்றத்திற்கென பயிற்றுவிக்கும் வித்தியாசாலை இது என்று நான் கூறப்பெருமையடைகிறேன். நிர்வாகம் நன்கு நடைபெறுவதும், முன்னேற்றம் மிகுந்து வருவதும், ஒத்துழைப்பு மலிந்துகிடப்பதும் போற்றத்தக்கதே. இது மென்மேலும் விரிந்து நடைபெற்று நிலவுவதாக.

(Sd) RM. கோவிந்தசாமி,
அந்தனப்பேட்டை.
14—5—38

---

## மொழி பெயர்ப்பு.

1—6—38

இன்று பிற்பகல் இக்கல்விச் சாலையைப் பார்வையிடும் பாக்கியம் பெற்றேன். மாணவ, மாணவிகள் உயரிய நிலையெய்துமாறு சீரியமுறையில் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றார்கள். நான் சில நாட்களுக்கு முன்பு இக் கலாசாலையை நடாத்திவரும் சங்கத்தின் ஆண்டு விழாவிற் கலந்துகொண்டேன். மாணவ, மாணவிகள் பாட்டு, பேச்சு, நடிப்புகளில் காட்டிய திறமையைக்கண்டு கழி பேருவகை எய்தினேன். இக் கல்விச்சாலையிற் போதிக்கப்படுவனவற்றில் கைத்தொழில் ஒரு சிறந்த அம்சமாகும். மிக்க திறமையுடன் பணியாற்றிவரும் இக் கலாசாலை ஆசிரியர்களைப் பாராட்டுகிறேன். இந்நகரின் அறிவாளிகளாகிய பெரியோர் பலர் இதனை நிருவாகம் செய்து வருகின்றனர். கல்வித்துறையில் அவர்களாற்றிவரும் பணி பாராட்டற்குரியது.

(Sd) V. ராமச்சந்திரய்யர்,
திருப்பத்தூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்.

பாரத தேவியின் சுதந்திர ஒளியும், தமிழன்னையின் இனிமையும் ஒருங்கே சரஸ்வதி வித்தியாசாலையில் திகழ்வதைக்காண எவருடைய மனந்தான் இறும்பூது அடையாது?

வாழ்க பாரதநாடு
வாழ்க தமிழ்மொழி
வாழ்க சரஸ்வதி சங்கம்.

(Sd) நா. ஹாலாஸ்யம்,
(சென்னை சட்டசபை அங்கத்தினர்.)
29—9—38.

---

## மொழி பெயர்ப்பு.

28—11—38

இவ்வூர் சரஸ்வதி வித்தியாசாலையை இன்று பார்வையிட்டேன். இக்காலாசாலையானது எல்லா அம்சங்களிலும் வளர்மதி போல் முன்னேற்றமடைந்து வருவதைக்கண்டு பெரிதும் சந்தோஷப்படுகின்றேன். கலாசாலையின் அபிவிருத்திக்காக அதன் திருவாளர்கள் அதிக சிரத்தை காட்டி வருகிறார்கள். எல்லாத்துறைகளிலும் மிக்க தேர்ச்சிபெற்று விளங்கும் இக் கல்விச்சாலை என்றும் சிறப்புற்று விளங்கவேண்டுமென விரும்புகிறேன்.

(Sd) S. மாணிக்கம்,
தலைமை ஆசிரியர்,
போர்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்,
கோட்டையூர்.

# ஆண்டுவிழாக்களில் தலைமை தாங்கியவர்கள்.

1-வது ஆண்டு திரு. A. V. சேஷகிரி சாஸ்திரி அவர்கள்,
கண்டனூர்.

2-வது ,, ,, தெ. அரு. சித. இராமநாதன் செட்டியாரவர்கள்,
கண்டனூர்.

3-வது ,, ,, சொ. முருகப்பா அவர்கள்,
"குமரன்" ஆசிரியர், காரைக்குடி.

4-வது ,, ,, பிச்சப்பா சுப்பிரமணியம் அவர்கள்,
காத்திநகர்.

5-வது ,, ,, சா. லெ. செட்டியப்ப செட்டியாரவர்கள்,
காரைக்குடி.

6-வது ,, ,, T. கோமதிநாயகம் பிள்ளை அவர்கள் B.A., B L.,
தேவகோட்டை.

7-வது ,, ,, P. V. சங்கரராமேஸ்வர ஐயரவர்கள் B. A.,
புதுக்கோட்டை.

8-வது ,, ,, பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை அவர்கள்,
M. A., B. L., திருநெல்வேலி.

9-வது ,, ,, R. P. சேதுப்பிள்ளை அவர்கள், B. A., B. L.,
திருநெல்வேலி.

10-வது ,, ,, T. M. நாராயணசாமி பிள்ளை அவர்கள்,
M. A., B. L., திருச்சி.

11-வது ,, ,, S. சோமசுந்தர பாரதி அவர்கள்,
M. A., B. L., மதுரை.

12-வது ,, ,, த. வே. உமாமகேஸ்வரம் பிள்ளை அவர்கள்,
B. A., B. L., தஞ்சை.

13-வது , ,, தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்,
தூத்துக்குடி.

14-வது ,, ,, T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள்,
B. A., B. L., திருநெல்வேலி.

15-வது ,, ,, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்,
"நவசக்தி" ஆசிரியர், சென்னை.

16-வது ,, ,, S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், B.A.,L.T.,
D. E. O. கூடலூர்.

ஓம்
வந்தேமாதரம்

புத்தாண்டு!

பூத்தது!! ★

மங்களம் பொங்குக!!!

புதிய வருஷத்தில் புதிய கொள்முதல்

குறைந்த விலையில் கண்ணைக்கவரும்
பல பல வர்ணங்களில்

★ ஜாக்கெட் ஸில்குகள் ★
★ ஷர்ட்டிங் ஸில்குகள் ★

இன்னும் பலவித

சுதேசித்துணிமணிகளும்

பட்டணம், பெங்களூர், காஞ்சீபுரம்
பலமாதிரி கண்டாங்கி தினுசுகளும்
ஏராளமாக வந்துள்ளன.

எங்கள் ஷாப்பிற்கு
உடனே விஜயம் செய்யுங்கள்

உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்:

# எஸ். ஆர் எம்.

அண் கோ,

பட்டுக் கண்டாங்கி வியாபாரம்,
கண்டனூர்.

சிறந்தது! மலிவு!!

சிக்கிரமாகவும் லாபகரமாகவும்
கஷ்டமில்லாமலும் தங்கள்

# ஆடைகளை

சுத்தம்செய்வது

## எது?

24

# தினமணி

வாஷிங்

# சோப்

24

இன்றே வாங்கி லாபமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:—

மதராஸ் இண்டோசோப் ஒர்க்ஸ் லிமிடெட்

மதராஸ்.




ஓடுகளில் சிறந்த

குதிரைப் பவுன் மார்க்


ஓடுகளையே

★ வாங்குங்கள் ★

காரைக்குடியில்

எல்லா மரக் கடைகளிலும்

கிடைக்கும்



செங்கலில் சிறந்த

மேஜை

செங்கலையே

வாங்குங்கள்

மு. அ. ஓட்டுமில்

அமராவதிபுதூர்.

Trial Once!

# லெட்சுமி அண் கோ,

Solicited!!

**(High Class Aerated Waters Manufacturers)**

புதுவயல், (Ramnad Dt.)

சுகாதார முறையின் ஆராய்ச்சி நிபுணர்களால் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றதும், கைதேர்ந்தவர்களால் தயாரிக்கப்பெற்றதும், உட்கொள்ளுவதென நன்குணர்ந்தசுசியும் ருசியும் ஒருங்கே அமைக்கப்பெற்றதும், சரக்குகள் தயாரித்துப் பலநாட்கள் சென்றும் உபயோகிப்பதில் குணங்களில் மாறுபாடில்லாததும் விலையில் சாசமானதுமான எங்கள் சோடா, கலர், கிரஷ்களை வாங்கி உபயோகித்து சுதேசத்தொழிலுக்கு ஆதரவு காட்டுங்கள். கல்யாணம் புதுமை முதலிய விசேஷங்கட்கு குறிப்பிட்ட காலத்தில் சப்ளைசெய்யப்பெறும்

ஏஜண்டுகள் தேவை

K. Arunachalam.
PROPRIETOR.

---

# வீனஸ் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

## தலைமை ஆபீஸ் டெல்லி.

(ஸ்தாபிதம் 1920)

குறிப்பு:-1938 வருஷத்திய 4வது இன்ஷியூரன்ஸ் ஆக்ட் 27-வது செக்ஷன், 1-வது பிரிவின் பிரகாரம் ஒவ்வோர் இன்ஷியூரன்ஸ் கம்பெனியும் பாலிசிஹோல்டர்களின் பாதுகாப்புக்காக ரிசர்வ் பண்டு தொகையில் 100க்கு 55 விதம் டிபாசிட்டு செய்யவேண்டும். ஆனால் எமது கம்பெனியோ இதுசமயம் 100க்கு 80விதம் அதாவது தேவைக்கு மேல் 25% அதிகமாகவே டிபாசிட்டு செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதுவே எமது ஸ்தாபனத்தின் பலத்திற்கு முக்கியமான அறிகுறியாகும்.

ஏஜண்டுகள் இல்லாத ஒவ்வோர் ஊரிலும் தக்க கமிஷன் அல்லது சம்பளத்தின் பேரில் உடனே ஏஜண்டுகள் தேவை. பாலிசிதாரர்களாகச் சேரும் விஷயங்களுக்கும், ஏஜன்ஸி விஷயங்களுக்கும், கீழ்கண்ட விலாசங்களுக்கு எழுதவும்.

**M. A. Srinivasa Iyengar**
Asst. Supdt.
Kottaiyur.
Ramnad Dist.

**Messrs. MONEY & Co.,**
Inspectors,
Kottaiyur.
Ramnad Dist.

# ஏ. எம். சுந்தரம் அண் கோ

## கல்லுக்கட்டி, காரைக்குடி.

திண்டுக்கல் இரும்புப்பெட்டி,
பூட்டு, ஸ்டீல் டிரங்கு வகையரு,
ஜெர்மன் கலர் படங்கள், சட்டம்,
கண்ணாடிகள் கிடைக்கும்.

**குறைந்த சார்ஜில்**
**படங்களுக்கு சட்டம் கண்ணாடி**
**போட்டுக்கொடுக்கக்கூடும்.**

# ஸ்ரீ மீனாக்ஷி லாட்ஜ்

## சைவாள் சாப்பாட்டு ஹோட்டல்,

கல்லுக்கட்டி வடகரை,

**காரைக்குடி.**

கைதேர்ந்த ஆள்களை கொண்டு
நவீனமுறையில் பொதுஜனங்க
ளின் வேண்டுகோளின் பேரில்
நடத்திவருகிறோம்.

அன்பர்கள் யாவரும் விஜயம் செய்து ஆதரிக்கக்
கோருகிறோம்.

மண் பானை சமையல்
அசல் திருப்பூர் அரிசி

**இனம் 1க்கு ரூ 0—3—0.**

சகல வாய்வுகளுக்கும் 110நீர் பெருங்காய
லேகியம் சஞ்சீவி போன்றது.

## உங்களுக்கு போட்டோ
## என்லார்ஜ்மெண்டுகள்

எடுக்க நேரிடும் சந்தர்ப்பங்களில் எங்கள்

**"நியூ ஸ்டுடியோவை"**

**மறந்துவிடாதீர்கள்**

உயர்ந்த முறையில், சிறந்த வேலையாக
குறைந்த சார்ஜில் உங்களுக்கு பூரண
மனத்திருப்தி தரத் தக்க விதமாய்
குறிப்பிட்ட காலத்தில் வேலைசெய்து
கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

நவீன சினரி செட்டிங்குகளும் உடை வசதிகளும் உண்டு.

**எம். கைலாஸ் பிரதர்ஸ்,**
நியூ ஸ்டுடியோ பிராஞ்சு,
8, செக்காலை ரோடு, காரைக்குடி.

ஹெட்டாபீஸ்:—மதுரை.


### கம்பன் கவி.

1. தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவன்
   அன்பினல்லதோர் ஆக்க முண்டாகுமோ.
2. மெய்யில் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ
   இரக்கமென்று ஒருபொருளிலாத நெஞ்சினர் அரக்கர்.
3. துன்புளது எனிலன்றோ சுகமுளது
   இன்றுளார் நாளைமாய்வார் புகழுக்கோர் இறுதியுண்டோ
4. மீளரும் தருமந்தன்னை வெல்லுமோ பாவம்
   நகையுடை முகத்தையாகி இன்னுரை நல்கு.
5. அஞ்சல் அஞ்சல் என்கிலாத
   ஆண்மை என்ன ஆண்மையே.
6. காதைகள் சொரிவன செவிநுகர் கவிகள்
   ஓய்ந்தவரல்லது இருந்தவர் யாரே.
7. பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே.
8. விரங்காத்தலை வேண்டென்று வேண்டுவாய்.

# இந்தியன் பாங்கி லிமிடெட்

தலைமையாபீஸ்:-நார்த்பீச்ரோடு, சென்னை.

பிராஞ்சு—காரைக்குடி.

<u>நடப்புக் கணக்கு:</u>— 100க்கு வருஷத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வட்டிகொடுக்கப்பெறும். ஐம்பதினாயிரம் ரூபாய் வரை தினசரி இருப்பு வைத்துக்கொள்ளலாம்.

<u>ஸேவிங்ஸ்பாங்கி கணக்கு:</u>—100க்கு வருஷத்திற்கு 2½ வீதம் வட்டிகொடுக்கப்பெறும். 5000 ரூபாய் வரை இருப்பு வைத்துக்கொள்ளலாம். வாரத்திற்கு 250 ரூபாய் பற்றிக்கொள்ளலாம்.

<u>டிபாஸிட் கணக்கு;</u>— ஒரு வருஷ தவணைக்கு 2½%
இரண்டு வருஷத்திற்கு 2¾%

100 ரூபாய்க்கு மேல் எவ்வளவு தொகையாயிருந்தாலும் பெற்றுக்கொள்ளப்பெறும்.

<u>ஸீஸன் டிபாஸிட்டுகள்:</u>—ரூபாய் 10,000-த்திற்கும்அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் கீழ்க்கண்ட பிரத்தியேக வட்டி விகிதப்படி ஸீஸன் டிபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பெறும்.

3, 4 மாதங்களுக்கு வருஷத்திற்கு 2¾%
6 மாதங்களுக்கு ,, 3%

<u>காஷ் சர்ட்டிபிகேட்டுகள்:</u>— ரூ 50-க்கும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 50 ரூபாய்க்கும், 3 வருஷ காஷ் சர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படும். ரூ. 46-2-0 கொடுத்தால் 3 வருஷக்கடைசியில் ரூ. 50 கிடைக்கும். இந்தத் திட்டத்தில் 2¾% காம்பவுண்டு இண்டரஸ்டு கிடைக்கின்றது என்பது கவனிக்கத்தக்கது.

தங்கநகை ஈட்டின் பேரில் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும். எல்லாவிதமான பாங்கிங் வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்பெறும். மற்ற விபரங்கட்கு கடிதமூலமோ அல்லது நேரில் ஆபீஸ்களில் வந்து விசாரித்துக்கொள்ளலாம்.

**புதுக்கோட்டையிலும்** எங்களுடைய பிராஞ்சில் மேற்கண்ட வட்டி விகிதப்படி டிபாசிட்டுகள் யேற்றுக்கொள்ளப்பெறும்.

காரைக்குடி ஏஜெண்ட்;—

எம். ராமமூர்த்தி.

# இண்டோ பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட்

மரவியாபாரம்,

செக்காலை ரோடு, : : : காரைக்குடி.

டைரேக்டர்கள்.

1. மகா-ள-ள-ஸ்ரீ சி.கெ.வீர. கா. காராயணஞ்செட்டியார் அவர்கள், பாங்கர் அண்டு லாண்டு லார்டு, டைரக்டர், செட்டிநாடு மெர்கண்டைல் பாங்கு லிமிடெட், கண்டனூர் (சேர்மன்).
2. மகா-ள-ள-ஸ்ரீ சி.கெ.வீர.சித. சின்னான்செட்டியாரவர்கள் பாங்கர் அண்டு லாண்டு லார்டு, கண்டனூர் (மானேஜிங் டைரக்டர்)
3. மகா-ள-ள-ஸ்ரீ சொ.சு.சொ. சொக்கலிங்கஞ்செட்டியார் அவர்கள், பாங்கர் அண்டு லாண்டு லார்டு, கண்டனூர்
4. மகா-ள-ள-ஸ்ரீ க.தெ.க.அள. அளகப்பசெட்டியாரவர்கள், பாங்கர் அண்டு லாண்டு லார்டு, டைரக்டர், செட்டிநாடு மெர்க்கண்டைல் பாங்கு லிமிடெட், காரைக்குடி.
5. மகா-ள-ள-ஸ்ரீ வடு.மு.ராம.மு. ராமனாதஞ்செட்டியார் அவர்கள், பாங்கர் அண்டு லாண்டு லார்டு, புதுவயல்
6. மக-ள-ள-ஸ்ரீ க.வி.சொ.வீ. அளகப்பசெட்டியாரவர்கள், பாங்கர் அண்டு லாண்டு லார்டு, கோட்டையூர்
7. மகா-ள-ள-ஸ்ரீ பி.எஸ். மணிஅய்யர் அவர்கள், டிம்பர் புரோக்கர் அண்டு கமிஷன் ஏஜண்டு, காரைக்குடி. (இந்தக் கம்பெனியின் தபால்) எக்ஸ் அபிஷியோ டைரக்டர்.

## முன்பு ஸியூரினிமா கோட்டகையிருந்த இடத்தில் புதிதாகக் கட்டியிருக்கும்

எங்கள் டிப்போவில் கட்டிடங்களுக்கு வேண்டிய எல்லா விதமான தேக்கு மரங்கள் சைஸ்கள், ரீப்பர்கள், தோதகத்தி, பொருசு, ஒட்டுப்பலகை, ஓடுகள், சதுரக் கல்கள் வகையறாக்களும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

கட்டிட ஆர்டர்களுக்கு டயம்பிரகாரம் சப்ளை செய்யக்கூடும். பொதுஜனங்களின் ஆதரவைப் பெரிதும் விரும்புகிறோம்.

**இண்டோ பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட்.**

## சுகமான வாழ்க்கைக்கு!

**எலெக்டிரிக் வசதி,**
எல்லாவிதமான வயரிங் சாமான்கள், 'ஸீயிலிங்' டேபிள் விசிரிகள், சுதேசி, இங்கிலீஷ், ஜெர்மன் பல்ப்புகள், அழகிய லைட் பிட்டிங்குகள்.

**தண்ணீர் சப்ளை,**
"மயர்ஸ்" "கிர்லாங்கர்" தண்ணீர்ப் பம்புகள், "ஜீ.இ.ஸி" "ஸீமன்ஸ்" "கான்ஸ்" "கிராம்டன்" 'எ.இ.ஜீ' மோட்டார்கள், ஷு பம்புசெட்டுகள்.

**சோபா, டேபிள், சேர், படுக்கை கட்டில்கள்,** குழந்தைத் தொட்டில்கள், (கிர்லாஸ்கர்) (சுதேசி) பர்னிசர்.

**நாகரீகமான கடிதப் போக்கு வரத்து,**
தமிழ், இங்கிலீஷ் டைப்ரைட்டர்கள்.

**கட்டிடங்களுக்கு அவசியமான சாமான்கள்,** இரும்பு, கர்டர், வளைவுதகடு, சாதாதகடு, டைமன் வலை, பெயிண்ட், வார்னிஷ் சாமான்கள், பித்தளைத்தகடு, செப்புத்தகடு, கம்பிகள், குழாய்கள், முதலிய எல்லாச் சாமான்களும் மிகவும் சகாயமான விலைக்கு எங்களிடம் கிடைக்கும்.

**சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (மதராஸ்) லிமிடெட்.**

**காரைக்குடி.**


நகரத்தார் பிரஸ், கண்டனூர்.